Jaffna Hindu College Old Boys' Association - United Kingdom



# யாழ்.இந்துக் கல்லூரி

பழைய மாணவர் சங்கம்
ஐக்கிய இராச்சியம்



# கலையரசி 2000

13.05.2000


எடுத்த காரியம் யாவினும் வெற்றி!
Astra Satellite வழியாக 24 மணி நேரமும்
ஐரோப்பிய வானலைகளில்...
Audio
7.56 GHz
Video
11.479MHz
SW
சிற்றலை வழியாக இலங்கை, இந்தியா,
தென்னாபிரிக்கா, மத்திய கிழக்கு நாடுகளில்...
மத்திய அலை 558 வழியாக மாலை
7 முதல் 9 வரை பிரித்தானியாவில்...
உலகத் தமிழர் மத்தியில்
உறவுப்பாலம் அமைக்கின்றது
ஐ.பி.சி. தமிழ்
MW
558
மேலதிக விபரங்களுக்கு
IBC Tamil
P.O.Box 1505
London SW 8 2ZH, U.K



# JAFFNA HINDU COLLEGE OLD BOYS' ASSOCIATION

U.K.

*Proudly presents*

# KALAIARASI 2000

# கலையரசி 2000

**13TH MAY 2000**
**SATURDAY**

**CHIEF GUEST**

*Mr A.Srikumaran*

Principal - Jaffna Hindu College

**GUEST OF HONOURS**

*Captain: S.Santhiyapillai*

*Mr.K.Poologasingam*

*WALTHAM FOREST ASSEMBLY HALL*

*Forest Road*

*London E17*

*U.K.*

## கல்லூரிக் கீதம்

வாழிய யாழ்நகர் இந்துக்கல்லூரி
வையகம் புகழ்ந்திட என்றும் (வாழி)

இலங்கை மணித்திரு நாட்டினில் எங்கும்
இந்து மதத்தவர் உள்ளம்
இலங்கிடும் ஒருபெருங் கலையகம் இதுவே
இளைஞர்கள் உளம் மகிழ்ந் தென்றும்

கலைபயில் கழகமும் இதுவே - பல
கலைமலி கழகமும் இதுவே - தமிழர்
தலைநிமிர் கழகமும் இதுவே!

எவ்விட மேகினும் எத்துயர் நேரினும்
எம்மன்னை நின்னலம் மறவோம்
என்றுமே என்றுமே என்றும்
இன்புற வாழிய நன்றே
இறைவன் தருள் கொடு நன்றே!

ஆங்கிலம் அருந்தமிழ் ஆரியம் சிங்களம்
அவைபயில் கழகமும் இதுவே
ஓங்குநல் லறிஞர்கள் உவப்பொடு காத்திடும்
ஒருபெருங் கழகமும் இதுவே!
ஒளிர்மிகு கழகமும் இதுவே!
உயர்வுறு கழகமும் இதுவே!
உயிரன கழகமும் இதுவே!

தமிழரெம் வாழ்வினிற் தாயென மிளிரும்
தனிப் பெருங் கலையகம் வாழ்க!
வாழ்க! வாழ்க! வாழ்க!

தன்னிகர் இன்றியே நீடு
தரணியில் வாழிய நீடு.

# கலையரசி 2000

## நிகழ்ச்சி நிரல்

13ம் திகதி சனிக்கிழமை மாலை 6.00 மணி

மங்கள விளக்கு ஏற்றுதலும் கொடியேற்றமும்

கல்லூரிக் கீதம்

மௌன வணக்கம்

தமிழ்த்தாய் வணக்கம் (நடனம்)

நடனம் – ஸ்ரீமீனாட்சி பரதநாட்டிய பள்ளி மாணவிகள்

தலைமையுரை – திரு.வு.கனேஸ்வரன்

வாத்திய சங்கமம் – இலண்டன் தமிழ் நிலையம்

பிரதம விருந்தினர் உரை – திரு. அ.சிறிகுமாரன்

சீட்டு குலுக்கல்

சிறப்புச் விருந்தினர் உரை – திரு.சி.சந்தியாப்பிள்ளை

நன்றியுரை – திரு.க.செவ்வேள்


இடை வேளை – இராப்போசனம்

இசை நிகழச்சி – RAINBOW வழங்கும் இளைய நிலா

நிறைவு


நிகழ்ச்சித் தொகுப்பு
சபா சுகந்தன் ஜீவா சுகந்தன்

கட்டட வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும்
புதிய விடுதி







# OUR CHIEF GUEST



**Mr. A. Srikumaran**
**Principal**
**Jaffna Hindu College**


# Computer Classes at Jaffna Hindu Hollege





# MANAGEMENT COMMITTEE - 2000/2001

Jaffna Hindu College Old Boys' Association U.K



Seated: L-R V.Shanmugalingam K.Seveal (Secretary) T.S.Perinpanathan (Patron) T.Ganeswaran (President) S.Jothilingam M.Vetpillai (Patron) N.Manivannan (Treasurer)
Standing: L-R S.Sivaraj L.Prathban A.F.Mariadas R.S.Kangeyan P.SEllango N.Jeyaseelan P.Kandasamy
Absence: K.M.M.A.Cassim G.Sangarapilai N.S.Shammugam V.Jeyapalan

# இலங்கைக்கான பிரித்தானிய தூதுவரின் யாழ். இந்துக்கல்லூரி விஜயம்


யாழ். இந்துக் கல்லூரிக்கு என புதிதாகக் கட்டப்பட்ட கூடைப்பந்தாட்ட ஆடுகளத்தை கடந்த 24.03.2000 அன்று பிரித்தானியத் தூதுவர் லின்டா ஜோய் டபீல்ட் அம்மையார் அவர்கள் திறந்து வைத்தார்.

பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் பலரும் சூழ்ந்து நின்று கைதட்டி மகிழ்ச்சி ஆரவாரம் செய்ய, நீலமும் வெள்ளையும் கொண்ட நீண்ட நாடாவை வெட்டி ஆடுகளத்தின் சகாப்தத்தை ஆரம்பித்து வைத்தார் தமது விஜயத்தின் முடிவில் அதன் நினைவாக மரக்கன்று ஒன்றையும் நாட்டி வைத்தார் அதுமட்டுமன்றி ஒரு தொகை தரமான கூடைப்பந்துகளையும் அன்பளிப்பாக வழங்கினார்.

அன்று மாலை நடைபெற்ற அங்குரார்ப்பண ஆட்டநிகழ்ச்சியில் யாழ். இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கத் தலைவரும் யாழ். அரச அதிபருமாகிய திரு கா. சண்முகநாதன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.இக் கூடைப்பந்தாட்ட ஆடுகளம் மறைந்த அமரர் திரு இ.ஈஸ்வரபாதம் அவர்களின் நினைவாக அவரின் புதல்வர்களால் அன்பளிப்பாக அமைத்துக் கொடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.



## ஆசிரியரிடமிருந்து....



இந்துவின் மைந்தர்களே வருக
தந்திடுவீர் தங்கள் ஆதரவுதனை
நொந்தங்கு வாழ்கின்ற மாணவரின்
சிந்துகின்ற கண்ணீரைத் துடைப்பதற்கு
வந்தெங்கள் கரங்களைப் பலப்படுத்துங்கள்

யாழ் இந்துக் கல்லூரியின் புத்தாயிரம் ஆண்டுக் கலையரசி விழாவுக்கு, 'கலையரசி" மலரின் ஆசிரியன் என்ற வகையிலே எல்லோரையும் வரவேற்கும் இவ்வேளையில் சில கருத்துக்களையும் இம்மலரில் வெளிக் கொணர்வது என் கடப்பாடாகும்.

உலகமென்ற பல்கலைக் கழகத்தில் நாம் என்றுமே மாணவர்கள் தான். எனவே இம்மலரில் காணும் குறைகளைப் பெரு உள்ளம் கொண்டு மன்னிப்பீர்களென்று எதிர்பார்க்கிறேன்

தமிழர்களாகிய நாம் தாயின் வயிற்றிலிருந்து பிறக்கும்போதே கடனாளிகளாகவே பிறக்கிறோம். பெற்ற கடன், உற்றார் உறவினர் கடன், வங்கிக்கடன் வீட்டுக் கடனென்று பலவகைக் கடனுக்கு ஆளாகிறோம்.

இத்தகைய இன்னோரன்ன கடன்களில் சில கடன்களை மாத்திரம்தான் நாம் தீர்த்து விட முயல்கிறோம். ஆனால் வாழ்க்கையின் மேம்பாட்டிக்கு அத்திவாரமிட்ட கல்லூரிக் கடனைக் கடனாகக் கொள்ளாது நன்கொடையாக நினைத்துத் தீர்க்க மறந்து விடுகிறோம்.

யாழ் இந்துக் கல்லூரி நமக்குக் கொடுத்த கல்விக்கடன் என்றும் அடைக்க முடியாத தொன்று தான். எனினும் கல்லூரி அன்னை தொடர்ந்தும் நமது சந்ததியினருக்கு கல்விக் கடனை வழங்குவதற்கு எமது பங்கும், ஆதரவும், ஒத்தாசையும் அன்னைக்கு அவசியமாகிறது.

'கடனென்ப நல்பவை எல்லாம்
கடனறிந்து சான்றாமை மேற் கொள்பவற்கு"

யாழ் இந்துக்கல்லூரியின் தோற்றத்திற்கும் அதன் வளர்ச்சிக்கும் காலத்தின் தேவையை உணர்ந்து நம் தமிழ்ப் பெரியார்கள் எவ்வாறு செயற்பட்டார்களோ, அதே போன்று இந்துவின் மைந்தர்களாகிய நாம் இக்காலத் தேவையை உணர்ந்து செயற்படுவோமாக.

இருபத்தோராம் நூற்றாண்டில் காலடி எடுத்து வைக்கும் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்களின் கைகள் கல்லூரி அன்னையின் கண்ணீர் துடைக்கும் கைகளாக மாறவேண்டும். பார்வையாளர்களாக இருந்து விடாது பங்காளிகளாக மாறி இன்னும் பல நூற்றாண்டுகள் கல்லூரியின் புகழ் நிலைக்க சிறக்க வழிசமைப்போம்.

தமிழினத்தின் அன்றைய தேவையையுணர்ந்து கல்லூரியின் தோற்றத்துக்கு வித்திட்ட தமிழ்ப்பெரியோருக்கும் அதன் வளர்ச்சிக்கு அயராது உழைத்த அதிபர்கள் ஆசிரியர்களுக்கும், தேசத்தியாகிகளாய் தம் உயிர் நீத்த மாணவர்களுக்கும் இம்மலரைக் காணிக்கையாய்ச் சமர்ப்பிக்கிறேன்.

நன்றி.

வாழ்க யாழ் இந்துக் கல்லூரி
வளர்க அதன் பணி வையகம் எங்கும்.

பிரான்சிஸ் மரியதாஸ்

## அதிபரின் வாழ்த்துச் செய்தி.

*எமது கல்லூரிப் பழைய மாணவர் சங்க பிரித்தானியக் கிளையினர் ஆற்றிடும் பணிகள் அளப்பரியன. ஏனைய பழைய மாணவர் சங்கங்கள் போன்றே பிரித்தானியக் கிளையினரும் கல்லூரி அன்னையை மகிழ்விக்கிறார்கள். அவர்களால் வெளியிடப்பட்ட 'கலையரசி" சஞ்சிகைக் கூடாக அவர்களை வாழ்த்துவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். இம்முறை அவர்கள் நல்லாயிரமாம் ஆண்டில் நின்று எம்மாணவர்கள் சென்ற காலத்தின் பழுதிலாத் திறத்தினையும் எதிர்காலத்தின் சிறப்பினையும் எடுத்துக் காட்டும் வகையில் கட்டுரை, கவிதைப் போட்டிகளையும் நடாத்தியும் கலையரசியில் பிரசுரித்தும் பரிசில் வழங்கியும் ஊக்குவிக்கவுள்ளனர். எமது மாணவர்களின் பலவகை ஆற்றல்களையும் வளர்ப்பதற்கு எம் பழைய மாணவர்கள் பல்வேறு வழிகளில் துணைபுரிகின்றார்கள்.*

> *'எவ்விடமேகினும் எத்துயர் நேரினும்*
> *எம்மண்ணை நின்னலம் மறவோம்*
> *என்றுமே என்றுமே என்றும் "*

*என்னும் அடிகளை நினைவூட்டுவனாக அவர்தம் பணி மென்மேலும் சிறக்க எல்லாம் வல்ல சிவஞான வைரவப் பெருமான் நல்லாசிகளையும் வேண்டி அமைகின்றேன்.*

அ. சிறிக்குமாரன்
*அதிபர்,*
*யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி*

# GREETINGS FROM CANADA!



Greeting from Canada! We in canada feel a great sense of brotherhood with our old boys around the world. We have,in fact, also forget a strong bond with our sister institution in this country, the Jaffna hindu ladies college association, because we share so much in common with them Together we are going forward to keep alive our rich Tamil heritage in this part of the world.But foremost in our minds,at present is the burning desire to be of service to the school which did so much to shape our minds and impart the wisdom to guide us through life.

Our association, based in toronto, has been in the vanguard of activities to help the college. The focus has always been on fund raising. every cent we collect goes to help the college meet ever increasing needs, whether it be to alleviate the hardships being endured by students,enhance the existing facilities or aid development expecting always that the funds will be used wisely,in accordance with the wishes of the funding QBAs.As the hard times continue to take their heavy toll on our homeland,we must redouble our efforts and do more.

The fund raising efforts take various forms:picnic,dinners,donations and cultural events.the crowning event each year is our Kalai vizha, a master piece of creative effort from our past students,'artists, writers,music directors, and stage designers, whose rich imagination and creative efforts conjure up a wonderful evening of entertainment to delight the large audience with music, dance, drama and comedy.

We have had old boys attending the vizha from the far corners of the world,like Australia, tamil Eelam, UK, US and europe. they were amazed and overwhelmed by the variety and richness of the cultural celebrations, our abiding affection for the old school, generosity of the people who have given freely to support a noble cause.

We were humbled by all their spontaneous outpouring of praise for what we are doing here in Canada.it was warm and touching,but most of all, it was inspiring and we took it as call to do even more, because nothing we do will ever enough to assuage the wounds of war and suffering inflicted on our people and institutions back home. from the many thoughts expressed by the visitors, the idea was born that if all the OBA as around the world could work together it would be an enormous force for the good of our beloved Jaffna Hindu.

A distinguished old boy, who is the vice chancellor of the Jaffna University, on a visit here in 1997, suggested we start a project to expand the college playground. We took it up with great enthusiasm and raised the necessary funds. to we are very happy to report that we are on the verge of completing the acquisition of properties for the expansion and making the dream of many generations of old boys, staff and students come true. this led us to believe that if various projects like this can be identified and a master plan prepared, we could get each one to be handled by on OBA. A meeting of OBA representatives from all over the world would present that unique opportunity to talk about a master plan - our vision for the college and how we are going to translate it into action

This led to the concept of an inter national convention,and the idea steadily took root and grew in our minds.it was challenge to try and organize a meeting of all the associations spread over may countries we in Canada have the capacity, talent, organisational skills and resources to host and international convention of this nature and magnitude, but some key considerations militated against our doing some this year.Obtaining visitor visas to enter Canada still pose problems for many and the lead time too was in sufficient.But we were delighted that the UK was willing to host, because london is still the hub of the would be the ideal venue for the inaugural convention. what is more,London has the largest expatriate tamil population in the western world, where our people have been settling in large numbers,long before they migrated to other countries. to everyone's great relief the UK has risen magnificently to meet the challenge. our heartiest congratulations to their OBA executive committee for hosting the historical convention we are certain they will spare no effort to make the convention a grand success.

Let us however,remember what is bringing us together. Our primary focus will be the college,and how we are going to organize and deliver assistance.in the process we will of course,also have a good time and meet all friends and colleagues, but mindful of the fact that we are there for a higher purpose Nostalgic memories will keep flooding our minds,strong emotions will tug at our hearts strings, tears will well upin our eyes recalling people and events past, and no doubt we would have more then a chuckle or two about old pranks we pulled on there and the good times we had as school boys. it will be an event to savour and remember for the rest of our lives.

Our central purpose would be will served if we can draw up a master plan for the college,spelling out but the major areas of concern are, and how we are going to allocate and what each one of our associations is going to be doing over the next several years.we believe, we will accomplish much more this way than if each OBA acted on its own, without any coordination. Let us also exchange some thought about the next convention by the close of the proceedings.

We are gathering momentum all the time, and going from strength as an international net work.Let us work together to take the premier institution of Hindu learning in our country to truly international standards as an educational institution. the historic step we are taking with this convention, we are convinced,will usher in a new era for Jaffna Hindu May it continue to shed its light on generations to come.

I end my message with prayers for the resounding success of the convention and that peace and harmony may return soon to the land of our forefathers.

**Capt. S Santhiapillai**
President

Jaffna Hindu College Association-Canada
Po Box 92074,
2900 Warden Avenue,
Scarborough,
Ontario M1W3Y8

# *President's Message*



This souvenir covers a milestone in the history of Jaffna Hindu College(JHC). The International Convention of Old Boys' Associations and Millennium Celebration, on an unprecedented scale hitherto undertaken by any Old Boys' Association in the UK is our cherished dream become reality. It reflects the current mood of the expatriate Tamils insofar as the needs of our homeland community concerned.

JHC is an icon of Tamil and Hindu cultural heritage. Despite the present state of devastation in the Jaffna peninsula, it stands out as the premier academic institution sharpening the wisdom and vision of its alumni.The teachers and students, through their sacrifice and dedication, have converted adversities into a path of achievements. They need to be commended and appreciated. Appreciation not just in words, but in deeds matching their degree of enthusiasm. With this in mind, a computer project has been initiated incorporating suitable proposals to bridge the technology gap and develop their Information Technology skills.

It is history that JHC is the brainchild of such visionaries as Pasupathy Chettiar and Advocate Nagalingam, to name but a few. Such philanthropists are no longer around JHC to support it through its dire period. It is now our turn; the turn of those of us who have been fortunate enough to pass through the portals of this great institution, which has made us what we are today. It is the collective responsibility of OBAs all over the world to co-ordinate such activities and direct assistance to the needy areas. If we fail in our duty, we shall be deemed not only to have betrayed the present and future generations, but also to have undermined the noble principles of our founding fathers.

The task ahead of us is, indeed, a formidable one. It is not just the College that needs our help but the community too. To many of the students, their livelihood itself has become a daunting question. Our efforts to uplift the standard of living of these underprivileged is the greatest service we could offer to mankind. Our Scholarship Fund appeal seeks to address this phenomenon in a small measure.

A single lamp can light hundreds more just as a teacher imparts his knowledge to generations of students. The brilliance of light does not diminish despite its repeated use, but continues to glow unabated. The high calibre of Jaffna Hindu teachers both past and present has contributed to its current glory. The presence of the principal in our midst today gives us an opportunity to demonstrate how much we treasure these jewels of the Crown.

**T.Ganeshwaran**
President

# பழைய மாணவர் சங்கத் தலைவரின் செய்தி

*யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் ஐக்கிய இராஜ்ஜிய பழைய மாணவர் சங்கம், உலகம் முழுவதிலும் உள்ள நமது கல்லூரிப் பழைய மாணவர்கள் அமைப்புக்களை ஒன்றிணைந்து சர்வதேச மாநாடு ஒன்றை நடாத்துவதையிட்டு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறது.*

*புத்தாயிரமாம் ஆண்டின் இந்த சகாப்தத்தில் மாறிவரும் சர்வதேசப் போக்குகளுக்கு ஏற்ப நமது மண்ணின் மைந்தர்களை உருவாக்க வேண்டிய பெரும் பொறுப்பு நமது அன்னையாகிய யாழ் இந்துத் தாய்க்கு உள்ளது. இந்தப் பொறுப்பை நிறைவு செய்வதில் நமது கல்லூரி எதிர்நோக்கியிருக்கும் சவால்களை அடையாளம் காணவும், அவற்றை எதிர்கொண்டு வெற்றி அடைவதற்கு எடுக்க வேண்டிய திட்டங்களை ஆராய்ந்து, வகுத்து, செயற்படுவதற்கான முன்முயாற்சிகளை எடுக்கவும் இத்தகைய மாநாடுகள், சந்திப்புகள் மிகுந்த பயனுள்ளவையாக இருக்கும் என்பது நிச்சயம்.*

*கல்லூரியின் அதிபரே இந்த மகாநாட்டில் பிரதம அதிதியாக பங்குபற்றுவது அதன் நோக்கத்தை எட்டுவதற்கு மிகுந்த பயனுள்ளதாக அமையும் என்பதும் திண்ணம்.*

*இந்த நிகழ்வில் நேரடியாக நான் பங்குபற்ற முடியாவிட்டாலும் கூட எமது சங்கத்தின் சர்வதேச இனைப்பாளர் திரு. ஈ. சரவணபவன் பங்குபற்றுவது மகிழ்வைத் தருகின்றது. கல்லூரி அதிபரும், திரு சரவணபவனும் இங்குள்ள நிலைமைகளை நேரில் விளக்கமாக எடுத்துரைப்பார்கள் என நம்புகின்றேன்*

*கல்லூரியின் சகல மாணவர்களும் நவீன தொழில் நுட்பங்களுடன் தம்மைப் பரிச்சப்படுத்திக் கொள்ள வாய்ப்பளிக்கும் விதத்தில் கல்லூரிக்கு ஒரு பிரத்தியேக கம்பியூட்டர் பயிற்சிப் பிரிவு ஒன்றை உருவாக்கித் தருவது இந்த சர்வதேச மகாநாட்டின் முக்கிய இலக்குகளில் ஒன்றாக இருப்பதை அறிந்து இங்கு எமது சங்க உறுப்பினர்கள் அனைவரும் மிகுந்த மகிழ்வு தெரிந்துள்ளனர்.*

*நமது சமூகத்துக்கு என அவசரமாக, அவசியமாக நிறைவேற்ற வேண்டிய ஒரு பணியை உரிய நேரத்தில், சரியான முறையில் அடையாளம் கண்டிருப்பது யாழ் இந்து பழைய மாணவர்களின் தூரதிருஸ்டிக்கு சான்றாக அமைந்துள்ளது.*

*எமது சங்கத்தினால் கல்லூரியின் புதிய விடுதி, புதிய மண்டபம் ஆகியவற்றை உள்ளடக்கி மிகப் பெரிய மூன்று மாடிக் கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டு வருவதை நீங்கள் அறிவீர்கள்.கல்லூரி மைதானத்தின் மேற்குப் புறமாக அமைக்கப்பட்டு வரும் இந்தக் கட்டத்தின் மூன்றாவது மாடியில் ஒரு பகுதியில் மைதானத்தைப் பார்த்தபடி ஸ்ரேடியம் (மைதானம் பார்வையாளர் அரங்கு) ஒன்று அமைந்துள்ளது. அதன் பின் புறம் (மூன்றாவது மாடியின் எ் சிய பகுதி) முழுவதும் கம்பியூட்டர் பயிற்சி மையம் அமைவதற்கான முழு வசதிகளையும் கொண்டிருக்கும்.*

*இந்த சர்வ தேச மாநாட்டின் முடிவில் கம்பியூட்டர் பயிற்சி மையத்தின் அமைவு பற்றிய தெளிவான விளக்கமான வரைவு அமைப்பை எமக்குச் சமர்ப்பிர்களானால் அந்த அமைவிடத்தை அதற்கு ஏற்பத் தயாரித்து வழங்கும் பொறுப்பை எமது சங்கம் ஏற்றுக் கொள்ளும் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.*

*இந்த விடயத்தில் கல்லூரியுடன் இணைந்து முழு ஒத்துழைப்பையும் வழங்குவதற்கு எமது சங்கம் தயாராக உள்ளது. தங்கள் சார்பில் இங்கு நாம் ஆற்ற வேண்டிய பணிகள் இருப்பின் அன்புரிமையுடன் அவற்றை எமக்குத் தெரியப்படுத்தும்படி வேண்டுகிறோம்.*

*மாநாடு வெற்றி பெற எமது வாழ்த்துக்கள்.*

**க. சண்முகநாதன்**
*அரச அதிபர்- யாழ்ப்பாணம்*
*தலைவர் ,*
*யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம்*

# Message for International Convention in UK from OBA Colombo Sri Lanka

On behalf of the Jaffna Hindu College Old Boys' Association, Colombo, I have great pleasure in sending this message for the souvenir to be published to mark the International Convention of sister organisations from all over the world.

We are proud that the winds of change have blown the fertile seeds produced by the mother tree all over the world and they have taken firm root and flourished wherever they went. What makes us more proud is that they have not forgotten their roots and are actively lending a helping hand in a time of need.

I personally belong to the A. Coomaraswamy era. It has been my privilege to drink at the educational fountains in Europe and America in later life, but our old school Jaffna Hindu College will rang equal to any of them in the intellectual curiosity our teachers aroused and the rock like value systems they imparted. We are truly fortunate that our impressionable and formative years were at Jaffna Hindu.

When the Hindu philosopher Dr. Sarvepalli Radhakrishnan came on a state visit to Sri lanka as the President of India in 1956, he was asked to comment on the phrase "a period of transition" being used frequently by the then Prime Minister Mr. S.W. R. D. Bandaranaike to justify the changes he was making. Dr. Radhakrishnan replied with a twinkle in his eye, "We have been in a period of transition from the time of Adam and Eve". So to us Hindus, and particularly the products of Jaffna Hindu College, change is something we can deal with. The world becomes a village, information flow becomes instantaneous, but our foundation is such that we remain comfortable.

May I end by wishing your International Convention all success.

**Dr.T.Somasekaram**
President,
J.H.C O.B.A
Colombo
Sri Lanka.

# Message from JHC old boys Trust

We learned with great interest the forth coming international convention of all sister Organisations around the world to the held in London on may 13, 2000- we are glad to note that the convention will consider inter-alia the current and future needs of the college. The cultural extravaganza that is scheduled to be held in the evening would undoubtedly be an appropriate finale for the function.

I have already sent an E-mail giving the various projects envisaged by the college, after I had consultations with the principal.As mentioned in my E-mail it is our intention to provide the forty (40)computers over the next two or three years.

We have already initiated two endowments-

1. The late Mr. Arunasalam chellappa Endowment fund for computer education.
2. The late Mr.A.S. Kanagaratnam endowment fund for english education.

We shall be glad if you place before the various sister institutions the need to contribute towards these two funds, so that the trust will in due course be in a position to pay for the cost of these two programs out of the income from the respective funds.

I take this opportunity to wish a very successful deliberation at the forth-coming convention.

**V.Kailasapillai**
President

Official Address:
Saraswathy Hall
No 75, Lorenz Road
Colombo 4

## யாழ் இந்து ப.மா.ச அமெரிக்கா

*யாழ் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் இங்கிலாந்து, உலகெங்கும் உள்ள யாழ் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கங்களில் பழைமை வாய்ந்ததும் மிக உற்சாகமாகச் செயலாற்று வதுமாகும்.*

*அதனது ஆதரவுடன் இப்புத்தாயிரம் ஆண்டில் நடாத்தப்படும் இவ்வுலகளாவிய இந்துக்கல்லூரிப் பழைய மாணவர் ஒன்று கூடலும் அத்துடன் நடைபெறும் விழாவும் வெற்றியடைய யாழ் இந்துக் கல்லூரிச்சங்க அமெரிக்கக்கிளையின் சார்பில் இவ்வாழ்த்து மடலை எழுதுவதில் மிக மகிழ்ச்சியடைகின்றோம்.*

*உங்கள் பணி அடுத்து வரும் சகாப்தத்திலும் தொடரவும் விழா சிறப்பு கல்லூரித்தாயை வேண்டி விடைபெறுகின்றோம்.*

*"வாழிய யாழ் நகர் இந்துக்கல்லூரி*
*வையகம் புகழ்ந்திட என்றும்"*

கு.பாலகிருஷ்ணன்
*தலைவர்*
*யாழ் இந்துக்கல்லூரி*
*அமெரிக்கக்கிளை*

# Message from JHC OBA Australia

I have great plasure is sending you this message to your International Convention of Jaffna Hindu College Old Boy's Associations all over the world and to the Cultural program "Kalaiarasi - 2000" on behalf of the Jaffna Hindu College Old Boys Association Victoria, Australia

It is very heartening to find out that your association is leading the way for all the Jaffna Hindu College Old Boys Associations all over the world. The Old Boy's Associations plays a very important role in making for the old students of Jaffna Hindu College and their friends living in foreign countries to meet, socialise and at the same time, help our school. Jaffna Hindu College has been serving the jaffna Community very well for a long time. In spite of various difficulties at present, our college is functioning well to serve the students of Jaffna Peninsula. We are proud of our college principal and teachers who are doing an admirable job in providing excellent education to our youngsters. It is indeed an admirable effort that your Association is organising a Grand raffle to fund 200 scholarships for the students of Jaffna Hindu College.

I wish you every success for your forthcoming International Convention, Kalaiarasi-2000 and the Grand Raffle.

R.Srikanthan
President
Registered Address
58A, Lakesfield Drive
Ferntree Gully 3056
Australia

## MESSAGE

The Jaffna Hindu College OBA (UK) should be congratulated for organizing an International Convention on the occasion of our Alma Mater almost reaching 110years of its service to our community. As an old boy and a former teacher having spent 32 years in the portals of Jaffna Hindu I feel proud and privileged to be invited to send a message for the souvenir to be published. Our worthy alumnus is spread across the globe and it is appropriate that the OBA in UK should take the lead in bringing all our sister associations under one umbrella to facilitate the resources of our tribe to be utilised for the betterment of our Alma Mater on a long range basis. The present Principal , the staff and the school community should be appreciated and congratulated for keeping our Blue and White flag flying high despite trying conditions and handicaps. A click at the web site reveals the recent achievements in the examinations and the science exhibitions.

None of us would regret the happy days that we spent at Jaffna Hindu where our future was moulded well by dedicated teachers who were institutions by themselves lead by a galaxy of principals who were shining giants in the educational horizon. Time and space restricts my elaboration. Let us jointly salute all of them for what we are, in different walks of life and in different lands. Let us all help in our own way - if not directly at least indirectly- our Alma Mater and through it our community of generations to come.

At this moment I like to recall with justifiable pride and pleasure that four of our alumnus are at the helm of affairs in Education-
Professor Balasundaram pillai - Vice chancellor, Jaffna University,
Mr . A . Srikumaran, Principal, Jaffna Hindu,
Mr. A. Thillainadarajah, Additional Secretary, Ministry of Education and
Mr . K. Parameswaran Secretary, Education, North East Provincial Council.
The last three being my old students and the first a junior College mate.
We,the alumnus of Jaffna Hindu wish the convention a grand and everlasting success.

**V. Sivasupramaniam**

V. Sivasupramaniam, Post Box 644,
Seychelles
Phone: 00248- 321507.
Mobile: 00248-774629
E-mail : vijaratnamsiva@hotmail.com

# செயலாளரின் எண்ணத்தில்...



யாழ் இந்து பழைய மாணவர் சங்க பிரித்தானியக் கிளை 1987ம் ஆண்டு அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு அன்று முதல் திறம்பட செயற்பட்டு வருவது பெருமைக்குரியது. சங்கத்தின் முதலாவது செயலாளராக இருந்து 1990ம் ஆண்டு கல்லூரியின் நூற்றாண்டு விழா மிகவும் விமரிசையாக கொண்டாடப்பட்டுள்ளது. மீண்டும் செயலாளராக இருந்து இன்றைய சர்வதேச மகாநாட்டையும் கலையரசி 2000யும் மிளிரச் செய்வதில் என் கல்லூரி அன்னைக்குச் செய்யும் சேவையாக கருதி பெருமிதம் கொள்கின்றேன்.

இந்துவின் மைந்தர்கள் உலகளாவிய ரீதியில் பரந்திருந்து கல்லூரித்தாயின் தேவைகளை முன்னின்று செயற்படுத்திக் கொண்டிருப்பது ஒன்றே அத்தாய் தன் மைந்தர்களை எத்துணை உயர்வாக உருவாக்கியுள்ளாள் என்பதற்கு வேறு சான்று தேவையில்லை.

பெரிய பிரித்தானியாவில் நடைபெறும் கலையரசி 2000 சர்வதேச மகாநாடு கல்லூரியின் செயற்பாடுகளிலும் தேவைகளை நிவர்த்தி செய்வதிலும் ஓர் திருப்பு முனையாக அமைய வேண்டும் என்பது என் அவா.

இந்நிகழ்ச்சிக்கு பிரதம அதிதியாக வருகை தந்திருக்கும் அதிபருடன் உரையாடலதில் கல்லூரியின் உண்மை நிலையும் தேவைகளும் புலப்படுகின்றன.

கல்லூரியின் நாளாந்த வாழ்வில் தகுந்த உணவின்றி வகுப்பறையின் மயங்கி விழும் காட்சி, உடுக்கத் தகுந்த சீருடையின்றி அதிபரை நாம் மாணவர்கள், காயப்படும் மாணவர்களுக்கு சிகிச்சை அளிக்க வசதியின்மை, பொருளாதார நிலைமையினால் நாடு தழுவிய ரீதியில் நடைபெறும் போட்டிகளில் பங்குபற்றி திறமையினை வெளிப்படுத்த முடியாமை, விளையாட்டு உபகரண பற்றாக்குறை ஆகிய
இவ்வுண்மை நிலைகளை அறியும் போது இந்துவின் மைந்தர்கள் இன்னும் உறங்கிக் கொண்டிருக்கிறார்கள் என்பது வெள்ளிடை மலை. குறிப்பாக இன்றைய நாட்டு நிலையறிந்து வெளிநாடுகளில் வாழும் பழைய மாணவர்கள் தங்கள் பங்களிப்பை வழங்க வேண்டியது எமது தலையாய கடமையாகும்.

பிரித்தானியாவில் ஆயிரக்கணக்கான பழைய மாணவர்கள் முன்னணி நிலையில் வசிக்கும் இவ்வேளையில் சங்கத்தின் செயற்பாடுகளில் ஒரு சிறு தொகையினரே மீண்டும் பங்களிப்பது வேதனைக்குரியது.

இலைமறை காய்களாக இருக்கும் அனைத்து பழைய மாணவர்களையும் ஒருங்கிணைக்கும் நோக்கில் நடாத்தப்பட்ட கலையரசி 99 எமது செயற்பாட்டில் ஓர் திருப்புமுனையை ஏற்படுத்தியுள்ளது.

கலையரசி 99ஐ நடாத்த என்னைத் தூண்டி உறங்கிக் கிடந்த பழைய மாணவர்களை விழித்தெழ வழிவகுத்த எமது சகோதர சங்கமான கனடா கல்லூரிச்சங்கத்தையும் அதன் தலைவர் என் ஆசான் திரு சந்திரபாய்பிள்ளையையும் நன்றியுடன் நினைவு கூர விரும்புகின்றேன்.

கலையரசி 99இன் வெற்றிதான் எமது இன்றைய சர்வதேச மகாநாடும் கலையரசி 2000உம் என்றால் அது மிகையாகாது. இத்தருணத்தில் கலையரசி 99இன் வெற்றிக்குத் தோள் கொடுத்த பழைய மாணவர்கள் சுபா சுகந்தன் ஸ்கந்தமூர்த்தி ஜெயபாலன் இளங்கோ ஆகியோர் பாராட்டப்பட வேண்டியவர்கள்.

கலையரசி 2000 நடைபெறும் இத்தருணத்தில் கல்லூரி அதிபர் எம்மிடன் வந்து கல்லூரியின் தற்போதைய நிலைமைகளையும் தேவைகளையும் தெளிவாக விளக்கியுள்ளார்.

பழைய மாணவர்களாகிய எமக்குள் வேறுபட்ட சமூக பொருளாதார அரசியல் கருத்துக்கள் இருப்பினும் கல்லூரித் தேவைகளைப்பூர்த்தி செய்யும் கைங்கரியத்தில் கல்லூரி அன்னையின் நன்றியுள்ள மைந்தர்களாக யாழ் இந்துவின் குடையில் நீல வெள்ளைக் கொடியின் கீழ் ஒன்றுபட்டு எமது அன்னைக்கு ஆற்ற வேண்டிய பணியைச் செவ்வனே செய்ய அனைத்துப் பழைய மாணவர்களையும் முன்வருமாறு அன்புரிமையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

க.செல்வேள்

# Treasurer's Report

The UK OBA, since its inception 1n 1988, has been actively involved in procuring and sending funds to the College. Following is an extract from my register, showing the cash and equipment that have been sent to date:

| | |
|---|---|
| £7000 | Cash was remitted to the Scholarship Board to set up 57 scholarships. Funds were donated by individuals and collected through fund-raising programmes. |
| £4,000 | Cash was remitted for various emergency needs. Funds were collected from individuals through special appeal. |
| 3 new computers | One was donated by an individual and two were purchased through special donations. |
| 2 Laser Printers | |
| 1 scanner | |
| 1 water pump | |
| 2 electronic chess games | |
| 1 fax machine | Funds were allocated from Committee fund, collected through various fund-raising events. |

On behalf the Executive Committee, I wish to sincerely thank all the old boys who have generously contributed towards our appeal for funds in the past. We seek your continued support to help our Alma Mater in every possible way.

Dr.N.manivannan
Treasurer

# இந்துவால் வளர்ந்து இந்துவை வளர்த்த எழில் மகன் பி . எஸ் அவர்கள்

'கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

'இது எங்கள் கல்லூரியின் தாரக மந்திரம் இத்தகைய வேதத்திற்குள் வழி நின்று இக்கல்லூரியில் பயின்று மேன்மை எய்தி எமது நாட்டிற்குப் பல்வேறு துறைகளில் அரும்பணியாற்றும் பழைய மாணவர்களின் செம்மை கண்டு இறும்பூத்தெய்துகிறேன்."

*யாழ் இந்துக் கல்லூரியில் 1976 ஆம் ஆண்டு நடைபெற்ற பரிசு தின விழாவில் அதிபர் திரு. பி. எஸ். குமாரசாமி சமர்ப்பித்த அறிக்கையின் ஒரு பகுதி.*

*குறிஞ்சி மலர் காலத்திற்கு ஒரு முறை எவ்விதம் பூக்கின்றதோ அது போல மனித குலத்திலும் சிலர் தோன்றி மகத்தான சாதனைகளை செய்து பிறப்பிற்கு பெருமை சேர்க்கின்றார்கள். அத்தகையவர்களில் ஒருவர்தான் திரு. பி. எஸ் குமாரசாமி இதற்கிணங்க, மாணவராகவும் ஆசிரியராகவும் அதிபராகவும் ஏறத்தாள அரை நூற்றாண்டு காலத்தை கல்லூரியோடு இணைந்து கொண்டு 'தோன்றிப் புகழோடு தோன்றுக" என்னும் வள்ளுவர் வாக்கிற்கினங்க வாழ்வாங்கு வாழ்ந்து மறைந்த கடந்த நூற்றாண்டின் ஒப்பற்ற மைந்தன் திரு.பி. எஸ் குமாரசாமி அவர்களின் சேவை காலத்தில் அழிக்க முடியாதாகும்.*

*யாழ் இந்துவின் நிழலிலே மாணவராக உருவாகிய இவர் தனது பட்டதாரிப்படிப்பை பல்கலைக் கழகத்தில் முடித்துக் கொண்டதும் 1950 ல் தான் உருவாகிய கல்லூரியிலேயே ஆசிரியராக பணியாற்ற ஆரம்பித்தார்.*

*1975 ம் ஆண்டு யாழ் இந்துக் கல்லூரியின் தரத்தை வலிமைப்படுத்த கல்வி அதிகாரிப் பதவியைத் துறந்து அதிபராகப் பதவி ஏற்றார். 1981,1982ம் ஆண்டுகளில் வட மாநிலத்தில் அதி உயர் கல்லூரியாக யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி திரு. பி. எஸ் அவர்கள் சிறந்த அதிபராகவும் தெரிவு செய்யப்பட்டார். அவரின் திறமைக்கு ஓர் எடுத்துக்காட்டு அன்பினால் அதிகாரத்தைப் பெறலாமேயொழிய அதிகாரத்தால் அன்பை பெறமுடியாது என்பதை உணர்ந்து மாணவர்களை வழி நடத்திய இவர் காலம் கல்லூரியின் சரித்திரத்தில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டும் பழைய மாணவர்களிடம் அன்பு கொண்ட அமரர் பி. எஸ் ஒவ்வொருவரின் முன்னேற்றத்திக்கும் முன்னின்று வழி நடத்தினார்.*

*அன்று பரிசு தின விழாவில் அமரர் கூறிய வார்த்தைகளை இன்று எமது பழைய மாணவர்கள் இந்த சர்வதேச மகாநாடுகள் மூலம் நம் கல்லூரிக்கு தொடர்ந்து புரியும் பணிகள் மூலமும் அந்த அமரர் கனவை நினைவாக்குவோம்.*

**சபா சுகந்தன்.**



## யாழ் இந்துவின் ஓர் ஒப்பற்ற மைந்தன்

எழுபத்தைந்தாம் அகவையில் தடம் பதிக்கும் யாழ் இந்துவின் ஓர் ஒப்பற்ற மைந்தன் தமிழ் வாழத் தனைத்தந்த தமிழ் வேந்தன் சிவராமலிங்கம் வாழ்க நீ வாழ்க , பல்லாண்டு பல்லாண்டு வாழ்க.
நிறைந்த முகம் நெற்றியில் நீறு சிந்திடும் புன்னகை அனைவரையும் தன்பால் ஈர்ந்திழுக்கும் பொலிவான தோற்றம் அரை நூற்றாண்டிற்கு முன்னேயே யாழ் இந்து மாணவர்களை இப்படி ஈர்த்தவர் ஆசிரியர் சிவராமலிங்கம் அவர்கள்.

பல்லாயிரக்கணக்கான இந்துக் கல்லூரி மாணவர்களின் உயர்வு, இவரிட்ட அத்திவாரத்தில் எழுந்தது. அவர்தம் அறிவுக் கிளைகளில் இன்றும் உலகெங்கும் விழுதாய் வேர்விட்டுக் கிடக்கும் மாணவர்களின் எண்ணிக்கை ஆயிரமாயிரமாம். சைவமும் தமிழும் இவரின் இரு விழி என்றால் அன்பும் கருணையும்தான் இவரின் இரு குழல் கடுகலன்கள் எனலாம்.

தமிழும் ஆங்கிலமும் இலக்கிய புலமையோடு இவரிடம் பதிந்தன. நாவில் இவ்விரண்டும் பயிலுதல் ஓர் தனியழகு. இந்து அன்னையிடம் பயன் பெற்று புகழ்பெற்ற மாணவர் ஆயிரம் பேர் அவர்களிற் பலர் உயர்வில் அவ்வன்னையை மறக்க, இம்மாமனிதர் என்று பட்டம் பெற்றாரோ அன்று தொட்டு ஓய்வு பெறும் வரை இந்து அன்னையின் எழுச்சிக்காய் தன் வாழ்வை அர்ப்பணித்தவர். அவர்தம் உண்மையும் விசுவாசமும் இந்து மாணவர் அனைவரையும் இரைடிமையாக்கிற்று.

பாரிச வாதத்தால் ஊனமுற்ற கால்களோடு மாணவர்தம் கைப்பிடித்து இவர் நடந்து வரும் காட்சிகண்டு தொடக்கத்தில் இரக்கப்பட்டனர்.ஆனால் எத்தனையோ மாணவர்களை அறிவுலகத்தில் கைப்பிடித்து நடக்கச் செய்த அவர்தம் ஆற்றல் கண்டு பின்னாளில் அவர்கள் வியக்கத்தொடங்கினர்.

மற்றவர்களில் தங்கி நடப்பவரல்ல. இவர் மற்றவரை தாங்கி நடப்பவன் எனும் உண்மை பிரிந்தது.

கல்லூரியில் இவருக்கென ஒரு தனி வகுப்பறை தேடி வருபவர்கள் மாணவர்கள் மட்டுமல்ல ஆசிரியர்களும் அதிபர்களுமாம்.

அசையாமல் ஓரிடத்தில் இருந்தபடி இந்துக் கல்லூரியின் அசைவைச் செம்மை செய்தவர்.
இந்துக்கல்லூரி வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய பெயர்களில் இவரது பெயரும் ஒன்று. இன்று இன்னலின் விளிம்பில் நிற்கும் யாழ்ப்பாணத்தில் ஏழை எளியவர்க்காய் மூலை முடுக்கேல்லாம் இவரது முச்சக்கர வண்டி ஓடுகிறது. மண்ணுக்கு எல்லையற்ற கடமை செய்து மாண்புற்று நிற்கும் இந்துவின் மைந்தர்கள் அனைவருமே பெருமை கொள்கிறோம். பல்லாண்டு பல்லாண்டு வாழ்க என வாழ்த்தி மகிழ்கிறோம்.

நன்றி யாழ் இந்து தகவல் திரட்டு

## நாங்களோ மத்தளங்கள்

நாங்களோ மத்தளங்கள் நானிலத்தில் இருபுறமும்
வாங்கியே கட்டுகிறோம் வாய் திறக்க மாட்டோமா?
கொக்கையொரு காகம் என்றால் கோபம்வர மாட்டாதா
மொக்கையொரு ஞானியென்றால் மூச்சுவிடக்கூடாதா
சக்கைதான் சாறு என்றால் தலையசைக்க மனம் வருமா?
தக்கவரைப் போலியென்றால் தப்பென்ன லாகாதா?

நாங்களோ மத்தளங்கள் நானிலத்தில் இருபுறமும்
வாங்கியே கட்டுகிறோம் வாய்திறக்க மாட்டோமா?

தூங்கிக் கிடப்பர்க்குத் துன்பமில்லை யென்கின்றார்
ஏங்கித் தவிப்பவர்கே யின்பமில்லை யென்கிறார்
தேங்கிக் கிடக்கிற தெளிவில்லாத் துர்நீரை
வாங்கிக் குடியென்றால் வாளாவிருப்போமா?

நாங்களோ மத்தளங்கள் நானிலத்தில் இருபுறமும்
வாங்கியே கட்டுகிறோம் வாய்திறக்க மாட்டோமா?

வெங்காயம் கூட்டுக்குள் வெதும்புதல்போல் உலகத்தில்
எங்கேனும் மூலையிலே இருக்கின்ற தம்பியரே
உங்கேனும் சுதந்திரமாய் உரைக்க முடிகிறதா
நங்காலம் போயிற்று நாதிறந்து பேசாயோ?

நாங்களோ மத்தளங்கள் நானிலத்தில் இருபுறமும்
வாங்கியே கட்டுகிறோம் வாய்திறக்க மாட்டோமா?

வெண்ணெய் திரண்டுவரப் பானையுடைகின்ற
விண்ணர் இருப்பதனால் வேதனைதான் மிச்சமென்றால்
அன்னை நாம் ஆயுள்மட்டும் ஆண்டாண்டு காலமதாய்
மண்ணில் பேசாது மௌனியாய் வாழ்வதுவா?

நாங்களோ மத்தளங்கள் நானிலத்தில் இருபுறமும்
வாங்கியே கட்டுகிறோம் வாய் திறக்க மாட்டோமா

*கலாநிதி காரை சுந்தரம்பிள்ளை*
*விரிவுரையாளர்*
*யாழ் பல்கலைக்கழகம்*

# ஆர்ப்பாட்டம் தேவைதான்

*போர்ப்பாட்டுப் பாடிப் புலியினரைக் கொன்றொழித்து*
*ஆர்ப்பாட்டம் செய்வ தலுப்புத் தருகிறது*
*ஆனாலும் ஆர்ப்பாட்டம் தேவைதான்*
*ஏனென்றால்*
*ஆர்ப்பாட்டம் இல்லையெனில் அலுவல் நடந்திடுமா?*
*வேலையா வீட்டு வேலிதனை யழித்து*
*பாலையா பத்தடிதான் ஆக்கிரமித் துட்புகுந்தால்*
*நானென்ன தெய்வதென்று நடுங்கி யொடுங்கி நின்றால்*
*சொந்த நிலமும்போய் சுதந்திரமும் போய்விடுமோ*
*அந்தவகையில் ஆர்ப்பாட்டம் தேவைதான்*

*போர்வேண்டாம் என்கின்ற கோசம் ஒருபுறமும்*
*போரேதான் வேண்டுமெனும் புலம்பல் ஒருபுறமும்*
*முரண்பட்டெழுகின்ற தரங்கெட்ட பூமியினது*
*கரந்தட்டி வரவேற்க இருசார்கும் பக்தருண்டு*
*ஆதலினால்*
*இவற்றையெலாம் பார்த்து*
*பேதலித்துப் போகாதீர்*
*பெருமைமிகு அரசியலார்*
*அடுத்துவரும் தேர்தலுக்கும் அதிகாரக் கதிரைக்கும்*
*எடுபடுமா இக்கோசம் என்றல்லோ நாடி*
*பிடித்திங்கு பார்கின்றார்*
*ஆனாலும்*
*நம் பாரதிதான் சொன்னானே*
*எதுவோ அரசாண்டால் இதுதான் நடக்குமென்று*
*ஆகையினால்*
*ஆர்ப்பாட்டம் தேவைதான்*
*அரசுக்கு ஆர்ப்பாட்டம் அதிகசுகம் கெ(ா)டுக்கும்.*

சு. திருபரங்குன்றன்

# Some Memories and Reflections of my life at Jaffna Hindu

I feel very happy and privileged to write this article on the occasion of the first international meeting of the Jaffna Hindu College O.B.A.s from different parts of the world gathered together in London.

In fact, I am at a loss as to where I should being and where I should end, what I should write and what I should leave, as I have been a student, right from my kindergarten days to the university level , and then ,a teacher . I also happen to be the son of a highly respected and loved veteran English teacher and disciplinarian, Mr . K. V. Mylvaganam, who was one of the live wires of that great institution for nearly four decades.

Memories come flooding in my mind , as I reflect on my life at J. H .C. I joined the Hindu Primary School, then known as the Hindu Tamil School, in the early 1940's . Then , I went on to J.H.C. in 1945, and studied there till 1956. Later, I passed out as a specialist English Trained Teacher (1st class) in 1977. and ended up in J.H.C. as an english specialist teacher in 1977. I was forced to leave it in 1984, when I had to the perilous situation prevailing there.

The story of my joining J.H.C. as a teacher is at once both interesting and intriguing. It also reflects the continuous vein of affection and close relationship that runs between the teacher and the student which is the hallmark of the Jaffna Hindu Collage tradition.

In July , 1977, I was still a teacher at the Urumpirai Saiva Tamil Vidyalayam, a calling distance from my home. At this time , Mr. P.S. Cumarasamy, a man dedicated to his old College with almost a religious fervour , had only recently assumed the principal ship of J.H.C. He was a student of my father , and then a colleague of his, and held him in great respect and love. He was , as I came to know later, quite eager and anxious to rope me into the College staff. He had even sent some feelers to me , but I was not in a position to acquiesce because of financial constraints at home.

One fine morning in July ,1977, as I was seated in my front verandah, I was surprised to see who but 'P.S'. (that is how he was called affectionately) striding through the front gate! I rose immediately and welcomed him. He made some preliminary inquiries as to the health and general well- being of mine and my family. Then, he asked me why I, a son of a loyal and veter an teacher at J.H.C , should allow myself to be constrained within the wales of a village School , and why I should not take the place of my father in a great institution like J.H.C ,I explained to him the difficulties I was faced with. But he swept them aside , and argued with me for some time, trying to convince me of the urgency and necessity of coming over to J.H.C. When my wife came to offer him a cup of tea, he even asked her to instill some good sense into my head.

Finally , I felt I shouldn't and couldn't ignore the request of an old teacher, and, more than that of a principal of J.H.C. so,I told him I would come. He was quite pleased, and ,now comes the crucial part of the story. Just as he was about to leave, he tapped his cost pocket, and told me with a smirk in his eyes, "Manoharan, I was your teacher. So I you know and what type of fellow you are. That is why wanted to get your consent , So that there would be no hiccups later on . Do you know what I have in my pocket? It is your transfer order to J.H.C ." I just stood there stunned and speechless, watching him go away, and in that moment realised how fortunate and blessed I was to have been a part of the lofty tradition and history that Jaffna Hindu College is.

Now , coming over to my student days, the period in which I was a student at J.H.C is often referred to as the "Golden Era"in the history of the College. I was fortunate enough to have been there at that time.

The man at the helm, the Principal Mr.A. Cumaraswamy, was a highly qualified person who maintained an enviable standard in the day-to-day life of the College. He was lucky to have had three leading personalities- the Triumvirate of the college, as you might call them - Mr.K. V.Mylvaganam, a veter English teacher in change of general discipline and the overall welfare of the college, Mr. K.S. Subramaniam, an exemplary Hostel warden who strode the dormitories like a colossus, and Mr.P.Thiagarajah, the doyen of Sports master in the north in that period, to assist him in the administration of the college. He had also a staff, studded with teachers, of high academic qualifications, of great calibre and character, motivated with a since of duty and selfless service in their chosen profession , which could really and truly be called "the noble profession, because of such teachers.

I would like to mention a fact hear, with reference to my personal life at J.H.C , in order to bring out the conscious awareness of an all - pervading conscience that was one of the hallmarks of that majestic institution.

Along with me , my elder brother, pathmanathan, who excelled both in studies and sports, and my cousin -brother ,Nagarajah, later a mayor, of Jaffna ,also studied at J.H.C.My father , in a private and confident undertaking and arrangement with the principal, saw to it that none of us three was ever in any of his classes. This is just one example to illustrate the meticulous care and attention taken to adhere to strict codes of conduct and morality.

There is a saying in Tamil-'யானை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே" - which means , 'the elephant comes behind ,the tinkling of the bell comes before' . This was so true of our principal, Mr.A.Cumaraswamy.Every day , he sets out on his regular rounds along the corridors of the college. He walks usually with his hands behind , and in one of his hands there is always the inevitable bunch of keys, which he invariably twists with his fingers, making a very audible tinkling , to which the ears of the students are ever alert and attuned. No wonder then that when Mr. Cum is on his way , he never meets any student strolling in the corridors, and there is always pin-drop silence in the classrooms!

There is one incident involving our principal which I Just cannot but relate here.

The principals room, then , was at the K.K.S.road end. Students who were late to College usually entered through the small entrance at that end , which also faced the principal 's room, as the main gates would have been closed at the opening time , 8.30AM. Usually , the Principal is seated in his room in the mornings, eternally on the look-out for any late comers. His room had swinging doors, and he could spot out the late comers from his seat, by looking at the legs of those students who tried to make a get- away by scurrying past his room . He usually calls them out in a loud voice, and cans them once they are in the room, and unable to come out with a plausible excuse. But , when he is in a particularly bad mood, he sometimes rushes out, and slaps or canes them.

It so happened that one fine morning, a young postman ,wearing his khaki shorts as usual , entered the college premises. Mr.Cum, in one his belling event moods, jumped out of his seat and out of his room, and slapped the poor postman right and left! The postman saw starts, and just stood there dumb found. It was only a few seconds later than Mr. Cum realised his mistake. Later, how the office staff and the academic staff were able to console and pleased the postman and averted any serious repercussions, is another story.

Almost all the teachers who taught me were lovable characters who were endowed with a keen sense of duty , and though strict and unrelenting in maintaining order and discipline in the classroom, were yet quite fond of their charges.

In particular , I must refer to Vidwan K. Karthigesu from Karaveddy, who was my class teacher when I was in the J.S.C. (std .8) He took English and tamil for us. He used to read out my essays in the class as an example to others. I was quite good in all the subjects except Arithmetic , as it was known then, but which included Algebra and Geometry as well.In my J.S.C promotion test, I scored highly in all my subjects, but just failed to get pass marks for Arithmetic. And ,Arithmetic was one of the three compulsory subjects, along with English and Tamil.

When I came to college the next term, I found that I had been given a double promotion to the S.S.C, skipping the prep .S.S.C.! I was so.surprised and happy. It was only later I came to know that my class teacher , Vidwan Karthigesu, had been calling at the principals house during the holidays, and convincing him that, in spite of the fact that I failed to pass Arithmetic , a bright and intelligent student should not be deprived of a double promotion, which , in his view, he deserved fully. And ,in the end , because of Vidwan's persuasion and persistence, the principal had given in.

It is a matter of justifiable pride for me that I did not let down my class teacher nor the confidence he had reposed in my talent and ability. Though he has passed away, he still remains quite alive in my thoughts.

Yet another teacher whom I cannot forget is Mr. Ehrambamoorthy, my tamil teacher in the S.S.C when, though getting distinctions in three subjects, and credits in two subjects, I got referred in Arithmetic, he who was good in his maths took upon himself the task of giving me free tuition in Arithmetic during his free periods . He was fond of me because of my prowess in Tamil. Thanks to him , I managed to pass My Arithmetic at the second attempt

In those days, J.H.C was not only leading in the academic field , but also was on top in the field of sports. It turned out hundreds of doctors, engineers, lawyers, judges, high commissioners, Senators, teachers, and professors who all enhanced the reputation of their alma mater in the execution of their duties in there respective fields.

In sports, though they did well in athletics and cricket, it was in football that J.H.C. was supreme. They were the invincible champions in football, both in the first and second Eleven, having conquered the championship in both eleven consecutively for several years.

Cadeting and scouting were also introduced during this period, and grew from strength to strength in the coming years. Some of the present generation would be surprised to know that there was boxing and wrestling too at J.H.C in those memorable days!

If I were asked to mention what in my opinion was the most striking feature in the life and history of this great institution of learning, I would , without hesitation, proudly and happily state that it is that intrinsic and incomparable rapport- the mutually close and affectionate relationship between the teacher and the taught which stands out prominently, and which has greatly contributed to the success of J.H.C ,and to the love and respect with which it is held in the hearts of thousands and thousands of its old students all over the world.

Ever today ,my heart years longingly towards the sates, premises, corridors and halls, the playground , the hostel and the kitchen , the lane roads around the college,and lingers lovingly and nostalgically, hovering eternally about it.

**Manoharan Mylvaganam**
Student 1945-1956 Teacher 1979 - 1984

# கல்லூரி பற்றி ஒரு கண்ணோட்டம்...

ஐக்கிய இராச்சியத்தில் இயங்கும் நமது யாழ்.இந்தக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் சர்வதேசத்திலும் உள்ள நமது சகோதர அமைப்புக்களை ஒன்றிணைத்து சர்வதேச ரீதியிலான சந்திப்பு ஒன்றை நடத்துவதற்கு வாய்ப்புக் கிடைத்திருப்பதையிட்டு அந்தச் சங்கத்தின் செயற்படும் உறுப்பினர் என்ற முறையில் புளகாங்கிதம் அடைகின்றேன்.

சுமார் இரண்டு வருடத்திற்கு முன்னர் தாயகம் செல்லக் கிடைத்த வாய்ப்பையும் நான் கற்ற யாழ் இந்து அன்னையைத் தரிசிக்கவும் கிடைத்த பேறையும் இங்கு நினைவு கூர்வது பொருத்தமானது என நம்புகின்றேன்.

கல்லூரி நடவடிக்கைகளை நேரில் பார்க்கவும் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், கல்லூரி சமூகத்தினர் போன்றோரை நேரில் சந்தித்து உரையாடவும் அங்குள்ள நிலைமைகளை அறிந்து கொள்ளவும் இந்தப் பயணம் எனக்கு உதவியது.

தாய் மண்ணில் சொற்ப நாள்களே செலவிட முடிந்தது என்பதால் கல்லூரியில் எல்லாப் பிரச்சினை களையும் என்னால் புரிந்து கொள்ள முடியாமல் போய் விட்டாலும் கூட அடிப்படை விடயங்களை ஓரளவு உணர்ந்து கொள்ள இயன்றது.

நான் அங்கு சென்று திரும்பிய பின்னர் சமர்ப்பித்த தகவல்களின் அடிப்படையில் எமது ஐக்கிய இராச்சிய பழைய மாணவர்கள் சங்கத்தினால் கல்லூரி ஆசிரிய அறையை நவீன வசதிகளுடன் திருத்தி அமைக்கவும் கல்லூரிஞான வைரவர் ஆலயத்திற்கு முன்னால் மாணவர்கள் ஒன்று கூடும் மண்டபத்தைப் புதுப்பிக்கவும் இது போன்ற ஏனைய செலவுகளுக்கும் சுமார் 5 இலட்ச ரூபாயை அனுப்பி வைக்க முடிந்தது.

பாடசாலை மாணவரின் புலமைப்பரிசில் நிதியத்திற்காக கடந்த ஆண்டில் மேலும் ஐந்து இலட்சம் ரூபாயை எமது சங்கம் அனுப்பவும் வாய்ப்புக் கிட்டியது.

இந்நிதி மேலும் பெருக வேண்டும் என்ற நோக்கத்தோடு ஒரு அதிஸ்டலாபச்சீட்டு மூலம் 20 லட்ச ரூபா கல்லூரி அதிபர் மூலம் அனுப்புவதற்காகப் பழைய மாணவர்கள் அனைவரும் பூரண ஒத்துழைப்பைத் தந்தள்ளார்கள்.

இந்நிதியைக் கல்லூரி நிர்வாகம் உரிய முறையில் செலவிடுவதற்கு ஒத்துழைத்த யாழ் பழைய மாணவர் சங்கம் கல்லூரி புலமைப்பரிசில் நிதியம் ஆகியவற்றிற்கு எமது நன்றிகள்.

கல்லூரியின் அடுத்த கட்டத் தேவைகளை அடையாளம் கண்டு அவற்றிற்கான திட்டங்களை நாம் தயார் செய்ய இந்த மகாநாடு நன்கு உதவும் என்பது கண்கூடு.

கல்லூரியின் நீண்ட காலத் தேவையாகிய கூடைப்பந்தாட்டத்திடல் அண்மையில் சுமார் ஐந்து முதல் ஆறு லட்சம் ரூபா செலவில் நவீன கூடைப்பந்தாட்டச் சட்ட விதிகளுக்கு அமைவாக கட்டி முடிக்கப்பட்டு கல்லூரிக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. கொழும்பில் உள்ள நமது ஐக்கிய இராச்சிய தூதரே நேரில் யாழ்ப்பாணம் சென்று அந்தக் கூடைப்பந்தாட்டத் திடலை திறந்து வைத்தது எமக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியைத் தந்தது.

எனது தந்தையார் அமரர் இ.சபாலிங்கம் கல்லூரி அதிபராக இருந்த காலத்தில் கல்லூரியில் முதன்முதலாக கூடைப்பந்தாட்டம் அறிமுகம் செய்யப்பட்டு குறுகிய காலத்தில் எமது கல்லூரி அகில இலங்கை சம்பியனாகவும் தெரிவானது. ஆனால் கல்லூரியில் அத்தோடு அழிந்து போன அத்துறைக்கு சுமார் இரண்டரை சசாப்தத்திற்குப் பின்னர் மீண்டும் இப்போது புதுமெருகு ஊட்டப்படும் வாய்ப்புக் கிட்டியிருப்பது வரவேற்கத்தக்கது.

எமது பழைய மாணவர்களைக் கொண்ட ஒரு குடும்பம் தங்கள் தந்தையாரின் நினைவாக இந்தத்திடலை அமைத்துத் தந்துள்ளது.

இதே மாதிரி வசதியுள்ள நமது பழைய மாணவர்கள் தனிப்பட்ட முறையிலோகுடும்ப ரீதியிலோ அணிகளாக இணைந்தோ கல்லூரியின் தேவைகளை அடையாளம் கண்டு உதவ முடியும். உதவ முன்வர வேண்டும்.

அத்தகைய முயற்சிகளும் இந்த சர்வதேச மாநாடும் சந்திப்பும் வாய்ப்புத்தரும் என எதிர்பார்க்கின்றேன்.

வைத்தியர் ச.ஜோதிலிங்கம்

# யாழ் இந்துக்கல்லூரி
# ஈழத்தமிழரின் இதயம்

யாழ்ப்பாணம் எனப்படும் ஈழத்தின் வட பிரதேசம் ஈழத்தின் தலையெனக் கணிக்கப்படுவது வழக்கம். ஏனெனில் மனித உடலாக முழு ஈழத்தையும் (இலங்கை) கணிக்கும் போது யாழ்ப்பாணம் புவியியல் அமைப்பாலும் மூளை முதலிய உறுப்புக்களைக் கொண்டிருந்தாலும் யாழ்ப்பாணம் ஈழத்தின் தலையெனக் கொள்வது பொருத்தமானதே.

அறிவுப்புலன்களாகிய கண். காது, மூக்கு முதலியன தலையிலேயே அமைந்து கிடக்கின்றன. இலங்கையின் அறிவுப்புலனும் யாழ்ப்பாணத்திலேயே மையங்கொண்டிருந்தது. யாழ்ப்பாணத்தில் ஐயாமார், ரொம்ப புத்திசாலிங்க என்று இன்றும் தென்னிலங்கை கருதுகிறது. ஒல்லாந்தர் காலத்திலிருந்து ஆங்கிலேயர் காலம்வரை இலங்கையின் சிவில் நிர்வாகத்தை யாழ்ப்பாணமே நடத்தியது. கல்வி பிறந்த யாழ்ப்பாணமாக இருப்பதற்கு பலகாரணங்கள் கூறப்படுகின்றன.அவற்றுள் ஒன்று மேலை நாட்டு மிசனரிமார், யாழ்ப்பாணத்தில் செய்த கல்விப்பணிகள். இந்த வாய்ப்பு தென்னிலங்கை மக்களுக்குக் கிடைக்கவில்லை.

யாழ்ப்பாணம் கல்வியில் ஓங்கியமைக்கு இந்த வாய்ப்பு ஒரு முக்கிய காரணமல்ல. துணைக்காரணம் மட்டுமே. சங்க காலத்துக்கு முன்பிருந்தே ஓங்கி வளர்ந்த ஒரு கல்விப் பாரம்பரியம் யாழ்ப்பாணத்திலிருக்கிறது.

பல்வேறு காரணங்களால் இந்தப் பாரம்பரியத்திற்கு இடையூறு வந்த போதும் நீர்வற்றிய குளத்துக் கொட்டியும் ஆம்பலும் அடங்கிக் கிடந்து மழைத்துளி கண்ட போது மறுபடியும் துளிர்ப்பது போல யாழ்ப்பாணத்துக் கல்விப்பாரம்பரியமும் மிசனரிமார்க்காலத்தில் துளிர்விட்டிருக்கிறது.

கி.பி 13 ஆம் நுற்றாண்டிலிருந்து தான் யாழ்ப்பாணத்தில் தமிழ் இராச்சியம் இருந்தது எனக்காரணம் காட்டி ஈழத்தமிழரின் பழமை புதைக்கப்படுகிறது. இதற்குச் சில கலாநிதித் தமிழர்களும் துணை போகின்றனர்.

இவற்றால் 13 ஆம் நூற்நாண்டுக்கு முன் யாழில் தமிழர் வாழ்ந்ததில்லை எனக் கூறமுடியுமா?
திரு. வி. ஆர் இராமச்சந்திரத தீட்சிதர் எழுதிய வரலாற்றுக்கு முந்திய தென்னிந்தியா என்னும் நூலில், இந்தப் புவியானது கோடியாண்டுகளுக்கு முன் காண்டாவனம் (Gonduwanam) அங்காரம் (Angarh) பாலாத்திக்கம்(Baltica) அமசோனி யம்(Amazonia) என்னும் நான்கு பெருநிலப்பரப்பாக இருந்த தென்றும் காண்டாவனம் என்பது ஆபிரிக்காவையும் கற்கடகக் கோட்டிற்கு தெற்கிலுள்ள இந்தியாவையும் (இலங்கையுட்பட ) ஆஸ்திரேலியாவையும் இணைத்த நிலப்பரப்பாக இருந்த தெனவும் கூறினார்.

மேலும் ஸ்கொட்எலியட் என்பவர் எழுதிய மறைந்த லெமூரியாக் கண்டம்(குமரிக்கண்டம் ) என்னும் நூலில் குறிப்பிட்ட மலை, தமிழில் குமரி என்றும் வடமொழியில் மகேந்திரம் என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது. இந்த குமரிமலை வடக்கு தெற்காக இலங்கையை உள்ளடக்கி மடகஸ்கார் வரை பரந்து கிடந்தது.

இந்த தொல் நிலப்பரப்பானது மயான பூமியல்ல. நாகரிகம் மிக்க மக்கள் வாழ்ந்த பூமியாகும்.
இங்கு கல்வி வளர்ச்சி பெற்றிருந்த தென்பதற்குச் சங்கப் புலவர்களாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பல புலவர்கள் வீற்றிருந்தமையே சான்றாகும்.

தொல்காப்பியர், முர் சியூர் முடிநாகராயர், அம்முவனார் ஈழத்து பூதத்தேவனார் முதலியோர் யாழ்ப்பாணத்தவர் என்பது கலாநிதி ஆ.வேலுப்பிள்ளை அவர்களின் கருத்தாகும்.
இத்தகைய கல்விப் பாரம்பரிய மிகுந்த காரணத்தினாலே தான் யாழ்ப்பாணத்தில் கல்வி ஓங்கி

வளர்ந்துள்ளது. இதை விடுத்து மிசனரிமாரால் கல்வி வளர்ந்தது என்பது ஒரு மாயை. அவர்கள் நமது கல்வியை வளர்க்க வரவில்லை. மதம் மாற்றவே வந்தார்கள் .

இலங்கையின் கிழக்கு மாகாணத்திலிருந்தும் தென்பகுதியிலிருந்தும் பலர் கல்வி பெறுவதற்காக யாழ் நோக்கி வந்துள்ளனர்.

நாவலருக்குப் பின் ஏற்பட்ட எழுச்சியின் பின் தமிழ், வடமொழி கல்வி பெறுவதற்காக தென்னிந்தியாவி லிருந்தும் பலர் வந்து யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து கல்வி பயின்று இருக்கின்றனர்.
நீர்வேலிச் சங்கரபண்டிதர் என்றும் வடமொழி அறி ர், சென்னைக் கிறிஸ்தவ கல்லூரியில் தொடர்ந்து மூன்று மணித்தியாலங்களுக்கு மேல் சொற்பொழிவு செய்து பலருடைய பாராட்டைப் பெற்றுள்ளார்.
பார்சிவலன் வேண்டுகோளுக்கிணங்க பைபிளை நாவலர் மொழிபெயர்த்த காலத்தில் தென்னிந்திய அறி ர்களும் அதனை மொழி பெயர்த்தனர். இவற்றுள் நாவலரின் மொழிபெயர்ப்பே சிறந்தது எனக் கொள்ளப்பட்டது.

நாவலரின் ஆதரவு பெற்ற சேர் பொன் இராமநாதன் எழுப்பிய கல்லூரிகள் இன்று பல்கலைகழகங்களாக மிளிர்கின்றன.
வயது 12லேயே தூத்துக்குடி சரக்குக் கப்பலில் சென்னை சென்று கல்வி கற்றவர் இராமநாதன்.
தம்பி என்னத்துக்கு படிக்கிறாய் என்று கேட்டால் சென்ற நுற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த யாழ்ப்பாணத்து மாணவன் ,BA, MA படிக்கிறேன் என்று கூறமாட்டான். நான் இராமநாதன் துறைக்கு படிக்கிறேன் என்றுதான் கூறுவான்.

என்ற மகன் இராமநாதன் துறைக்கு படிக்க வேண்டும் என்றுதான் யாழ்ப்பாணத்தாயின் ஏக்கம்.
எதற்கும் கழற்றாத தாலியை மகனின் படிப்புக்குக் கழற்றத் தயாராக இருப்பவள் தான் யாழ்ப்பாணத்துத்தாய்.

கிறிஸ்துவத்தால் ஆங்கில ஆட்சியால், சைவ சமயமும் தமிழும் போற்றி வந்த விழுமியங்கள் நிலை கலங்கிய போது (இதனை நாவலர் எழுதிய யாழ்ப்பாண சமயநிலை என்னும் நூலாக ) நாவலரும் இராமநாதனும் பல்லாயிரமாண்டு களாகப் போற்றி வந்த விழுமியங்களைப் புனருத்தானம் செய்தனர்.

அவர்கள் ஏற்படுத்திய எழுச்சியினால் இந்துக் கல்லூரிகள் தோன்றின. இவற்றின் நோக்கம் சைவ சமயமும் தமிழ் மொழியும் போற்றிய விழுமியத்தில் நவீன கல்வியை ஊட்டுவதாகும்.
இப்பணியில் இன்று வரை சலியாது உழைத்து தலை நிமிர்ந்து நிற்பது யாழ் இந்துக் கல்லூரி ஆகும். கல்விமான்களாகிய அதிபர்கள் கல்வியின் மாண்புணர்ந்த ஆசிரியர்கள் கருத்தூன்றக் கற்கும் மாணவ மாணிகள் இத்தனையும் ஒருங்கிணைந்து இயங்கியமையினால் யாழ் இந்துக் கல்லூரி ஈழத்தமிழரின் இதயமாயிற்று.

யாழ் இந்துக்கல்லூரியின் உயர்விற்குக் காரணம் மேலே காட்டியுள்ள முத்திறப்பாலரும் வழங்கிய அர்ப்பணிப்பு என்பது அனுபவித்தவர்களுக்குத் தான் தெரியும்.

யாழ் இந்துக் கல்லூரி ஏனைய இந்துக்கல்லூரி ஏனைய இந்தக்கல்லூரிகட்கு உடன்பாட்டு உந்து சக்தியாக விளங்கியது போல் கிறிஸ்தவக்கல்லூரிகளுக்கும் எதிர்மறை உந்துசக்தியாக விளங்கியது. யாழில் வாழ்ந்த இஸ்லாமியச்சகோதரரின் கல்வி வளர்ச்சிக்கு யாழ் இந்துக்கல்லூரி பெரும்பணி ஆற்றி உள்ளது. யாழ் இந்துக்கல்லூரியும் வைத்தீஸ்வராக்கல்லூரியுமே இஸ்லாமியரது கல்வி சிறக்க துணை செய்தன.

தம் பிள்ளைகள் யாழ் இந்துக்கல்லூரியில் கற்பதன் மூலமே தம் விரும்பியவற்றைப் பெற முடியுமென பெற்றோர்கள் கிழக்கு மாகாணம் முல்லைத்தீவு தென்மராட்சி வடமராட்சி தீவுப்பகுதிகளில் இருந்தும் பல சிரமங்களுக்கு மத்தியில் தம் பிள்ளைகளை இங்கே அனுப்பி வைத்தனர்.

பல கிறிஸ்தவக்கல்லூரிகள் இருந்த போதிலும் இங்கே அனுப்பி வைத்ததன் நோக்கமென்ன? காரைநகரில் விடியற்காலையில் மாணவர்கள் கூட்டம் கூட்டமாகப்புறப்பட்டு பொன்னாலை கடலைக்கடக்க வேட்டியை உயர்த்திக் கட்டியபடி கோவணத்தோடு புத்தகங்களைத் தலையில் சுமந்த படி தினமும் காலையில் யாழ் இந்துக் கல்லூரிக்குச் சென்று மாலையில் கடல் கடந்து வீடு வந்த காலம் ஒன்று இருந்தது.

வழியில் வட்டுக்கோட்டையில் யாழ்ப்பாணக்கல்லூரி என்னும் கிறிஸ்தவக்கல்லூரி தலை நிமிர்ந்து நின்றது. அங்கு படிக்காமல் இத்தனை சிரமங்களையும் இந்த மாணவர்கள் ஏற்கக் காரணம் என்ன? பெற்றொர்கள் இவர்களை சிரமப்படுத்துவதற்குக் காரணம் என்ன?

இன்றைக்கும் காரைநகர் சைவத்தின் தமிழின் விழுமுயத்தைப் போற்றுகின்றதென்றால் இதற்கு அவர்கள் அன்று கொடுத்த விலை தான் காரணம்.

காலகதியில் காரைநகர் இந்தக்கல்லூரி யாழ்ரன் கல்லூரி போன்ற நூற்றுகணக்கான கல்லூரிகளுக்கு யாழ் இந்தக்கல்லூரி இதயத்தில் இருந்து இரத்தம் பாய்ச்சப்பட்டது. விழுமியங்களைப் போற்றி உலகியல் வாழ்வைப் புறக்கணிப்பதோ உலகியல் வாழ்வைப் போற்றி விழுமியங்களைப் புறக்கணிப்பதோ முழுமையான கலையாகாது.

கல்வியின் பால் மறுமை அம்மணம் மூன்றும் தருவதாகும் இவையே வள்ளுவர் போன்ற சான்றோர் கண்ட கல்விக் கோட்பாடு. யாழ் இந்துக்ககல்லூரி இந்த மூன்று கோட்பாடுகளுக்கும் தன்னாலான பங்களிப்பை பல ஆண்டுகளாக ச் செய்து வருகின்றது. யாழ் இந்தக் கல்லூரி முன்முகப்பட்ட பல்கலைக்கழகத் தேர்வுகளிலும் விளையாட்டின் பல துறைகளிலும் கொடி கட்டிப் பறந்து வருகின்றது.

அங்கு கற்றுத் தேறிய மாணவர்கள் உலகெலாம் விழுமியங்களைப் போற்றி புகழுடன் வாழ்ந்து வருகின்றனர்.

பட்டனில் குட்டன் கைகோட்டை என என மலையாளத்தில் ஒரு வசனம் உண்டு. பட்டர் ( அபிராமிப்பட்டர் நம்பூதிராட் ) என்னும் பிராமண வகுப்பாரின் முட்டாள் கூட கைகோட்டில் கட் ஆக இருப்பானாம்.

ஆம் Where are you coming from?I am coming from Jaffna Hindu
அதுவே ஒருவனை உயர்த்தி விடும்.

உயரிய இம்மை வாழ்வு பெற்றவர்க்கு உரிய மறுமையும் நிறைவான அம்மை வாழ்வும் கிடைக்கும்.

அம்மையே சிவயோகம் ஆள்வதற்கு யாதுமோர் ஐயுறவு இல்லை யே எனச் சுந்தரர் கூறியுள்ளது பொல் இக்கல்லூரு மாணவர் இம்மை மறுமை மாத்திரமன்றி அம்மையில் சிவலோகம் ஆளவதற்கும் யாதுமோர் குறைவில்லை. ஏனெனில் வீரதிலகம் விவேகானந்தனும் ஈழத்து ானி சிவயோக சுவாமிகளதும் திருவடித் தீட்டைப் பெற்ற திருத்தலம் யாழ் இந்துக்கல்லூரி ஆகும்.

*வித்துவான் வேலன்*
*இலண்டன்*

# Loverly Cricket Hangover

Cricket, that very English game, has engulfed the tamil community in canada as never before with the growing influx-of cricket -mad young men (and women) from back home.It's like sweet hangover from the the good old days in the sweltering heat of sun-baked jaffna..far,far away from home, we have opportunity of seeing our 'boys' in action and experiencing the consummate sensation that comes from seeing a full blooded drive through the covers or the dull thud of wood as the "red cherry" rips through the defence to knock the stumps flat to the ground.It does not matter whether we are players or mere spectators, the exhilarating feeling is the same.such is the game of cricket and such is the excitement and passion it arouses within us. It is a love that has been nurtured over time in our homeland.

What is that stirs such passions within us for the game?Is it the sparkling island waters,rhythmic beat of the baila or some power full magical brew?some have even said it is the hot curry that creates our relish for cricket.No one knows for sure. perhaps it is little everything or perhaps God himself planted the seed within us in a flight of fancy.All the same,we have to marvel at the way the game has proliferated in the pearl of the Indian ocean.

Cricket is played everywhere on the island - on the streets,the village 'grounds', schools, clubs and international test arenas.But real dynamo is school cricket,replete with "big"matches,rivalling Test encounters on a micro scale. They are epic affairs, fought with fierce rivalry. rich in tradition,the encounters are colourful,fun-filled and noisy spectacles Whole villages and towns are drawn into the fray. people scoot off from work, behind their bosses,, to watch the matches and join in the revelry. car loads of screaming school girls descend on the ground to rack up the excitements and the pulse of schoolboys. four-wheeled contraptions of all sorts are commandeered to carry over enthusiastic and boisterous schoolboys,clad in wildly blazing coloured attire,with flags fluttering from all sides, parade around town to the ear piercing sound of blaring trumpets and beating drums.

Schoolboy cricket stars are idolised by every one,from schoolgirls to shopkeepers.It is no wonder then why the game has come to be deeply etched in our psyches.The army of cricket who started new lives in canada and brought the love of the game with them to these shores, are the product of schools.wherever we live, whatever we do or however old,are always drawn back to the game, because it's more then just a game. cricket has got character, It adds something to our way of life.

The Canadian legacy goes back to the years before that black day in july 1983 started the exodus. it was time when our community was just a speck of what it is today. for our good fortune,as if by providence there appeared on the cricket scene some Jaffna. Hindu old boys who had rare passion for the game.they rolled out the first matting in Canada for the Tamils, with the deep faith that "from little acorns grew great oaks'. soon the game spread like fire within our community. so when turbulent times in our homeland brought a flood of immigrants in to canada from the mid eighties,the wealth of cricket talent that arrived and was impatient to pads and get on the field,did not feel they were missing anything.They had to just go out and continue their innings, as if there was no break in love for the game they carried with them to these shores, that wonderful, sweet hangover from cricket,loverly cricket.

***V Gunaratnam,***
*JHC Association-Canada*

# எங்கள் அன்னை

செந்தமிழைச் சைவத்திருமதத்தை முந்தைப் பழமைகளை
அந்நிய மோகத்தி லேமறந்து - எம்மினத்தோர்
பன்றிகளாய்ப் பாமரராய் வாழ்க்கையிலே ஒளியாத்
தோன்றியவள் இந்து அன்னை

ஒருநூறோடோர்பத்து ஆண்டுகளாயெம்மண்ணில்
பெருமையுடன் நிமிர்ந்துநின் கின்றாள்- அருமைப்
பொறியியளாளர் வைத்தியர்கள் புகழ்மிக்க மாமனிதர்
அறிவியலாலர் ஆக்கித் தந்தாள்.

நல்லோரென மேடையேறு் சொல்லோரென விளையாட்டு
வல்வோரெனப் பெரும் கவி ரெனக் - கல்வி
கற்கவென வந்தோரைக் காசினியிலே மாற்றும்
அற்புதத்தைச் செய்பவளெம் அன்னை.

வண்ணையிலே பொலிவோடு வாழ்த்திருக்கும் இக்கல்விப்
பண்ணையொரு புண்ணியபூமி - முன்னரிங்கு
வீரத்துறவி விவேகானந்தர் காந்தியெனும்
பாரதத்தோர் வந்ததாலே .

பாழ்பட்ட சண்டையினாற் பசுமையி ழந்திட்ட
யாழ்மண்ணில் நின்றுபணி யாற்றித் - தோள்
கொடுத்துதவு கின்ற தூயோரிற் பலரைக்
கொடுத்தவள் எங்கள் அன்னை.

கண்ணனைய சைவத்தமிழ் காக்கவென வந்துதித்த
பெண்ணெமக்குக் கல்விப்பால் தந்தாள் - அன்னையிவள்
ஆழிசூழ் அவனியிலே ஆறறிவோர் வாழுமட்டும்
வாழியவே நீடு வாழியவே.

தி.கோபிநாத்

# நமது கொடி

*எமது கல்லூரியின் நீலமும் வெண்மையும் கூடிய கொடியைப் போற்றிப் புகழ்ந்து எமது பழைய மாணவரும் முந்நாள் நல்லை ஆதீன முதல்வருமாகிய பரிபூரணத்துவமெய்திய ஸ்ரீலஸ்ரீ பராமாச்சாரிய சுவாமிகளால் 1937 ல் பாடப் பெற்ற பாடல்*

(திவ்விய தரிசனம் தரலாகாதா... என்ற மெட்டு)

ஜெயக்கொடிதனின் வர்ணமே பாரீர் ...எம்தம்கல்லூரி
மேகவர்ணனின் மேனிதன் நிறம்
காணீர இக்கொடிதனில் இன்றே -ஜெயக்கொடி

கல்லூரி மாணவர் கனிந்துமே போற்றும்
கலைவாணி துகிலுமே வெள்ளை
கலைமகள் தாமும் களிப்புடனமரும்
கமலமுமே வெள்ளை தானே -ஜெயக்கொடி

வாணி கணவனை நாபியால் பெற்ற
வாசுதேவன் நிறம் நீலம்
வாமனும் பள்ளி கொண்டிடும் ஆழியும்
வான்போல் நீலநிறம் தானே!! -ஜெயக்கொடி

நீலமேகம் தனிப் பாலச்சந்திரன் போல்
நீலமும் வெண்மையும் பாரீர்
நீடூழி காலம் நீடித்த ஸ்தம்பத்தில்
நீலவெண் துகில் தானே பறக்கும் -ஜெயக்கொடி

இந்து இளைஞன் 10-11-1937

## யாழ் இந்துவின் ஆற்றுப்படையினர்...
*(ஒரு பருந்துப் பார்வை)*

*திரும்பிப் பார்ப்பது ஒரு மகிழ்ச்சி. தனி மனித வாழ்விலேயே மகிழ்ச்சி தரும் ஒன்று ஒரு நூற்றாண்டுக்கு மேலாக அரும்பணியாற்றி ஆயிரம் ஆயிரம் அரும்பெற்ற புதல்வரை கலை உலகத்துக்குத் தந்த கலைக்கோட்டத்தின் வரலாற்று நாயகர்களைத் திரும்பிப் பார்ப்பது பெரு மகிழ்ச்சி தருவதாகும்.*

*ஆற்றுப்படையினராக அமைந்து கல்லூரியை வளர்த்த ஆன்றோர் வரிசை மிக நீண்டதொன்று. ஆரம்பத்திலிருந்து இன்றுவரை கல்லூரியின் ஆட்சிப் பொறுப்பைக் கல்விக்கும் தமிழ் , கலைப் பண்பாட்டு விழுமியங்களின் காவலர்களாகவும் ஏற்றுக் கொண்டவர்கள் யாழ் இந்துவின் அதிபர்கள்.*

*இவ்வரி நெடும் புத்தகத்தில் ஒரு சில பெருமக்களை நினைவு கூறுவதே இக்குறிப்பு.*

*இந்து உயர் நிலைப்பள்ளி -The Hindu High School என்ற பெயருடன் 1890 ஒக்டோபர் 23ம் திகதி நிறுவப்பட்டு 1895 இல் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆகியது.*

*தொடக்கத்தில் திரு கோட்மான் அப்பாப்பிள்ளை தலைமை ஆசிரியராக பணியாற்றினார்.1892 இல் திரு நெவின்ஸ் செல்லத்துரை அதிபரானார். பாளயங்கோட்டையில் உயர்நிலைப் பள்ளியொன்றின் அதிபராக இருந்த இவரை திரு பசுபதிச் செட்டியார் அவர்கள் பெருமுயற்சியினால் இந்துவின் அதிபராக்கினார். திரு நெவின்ஸ் அவர்கள் 1892 தொடக்கம் 1902 வரையும் அதிபராகக் கடைமை புரிந்தவர்.*

*சிறந்த கல்விமான். நிர்வாகி மட்டுமன்று. கல்லூரியின் வளர்ச்சிக்கு கால்கோள் செய்தவர். கிறிஸ்தவராக இருந்த போதும். ஆட்சிசபை தன் மீது கொண்டிருந்த விசுவாசத்தை மதித்துப் பணியாற்றிய பெருமகன். இவர் காலத்தில்தான் தொடக்கத்தில் கல்கத்தா பல்கலைக் கழகத்துடனும் இந்துக் கல்லூரியை இணைத்து பட்ட முதல் தேர்வுகளுக்கு மாணவர்களை தயார் செய்து வெற்றி கண்டவர்.*

*மேலாக இந்து இளை ர் கழகத்தை இவரே அங்குரார்ப்பணம் செய்தவர் யாழ் இந்துவின் வரலாற்றில் தனக்கென ஒரு இடத்தை இவர் பெறுகின்றார்.குறுகிய காலமானாலும் தன் கல்வித்திறனாலும் கேம்பிறிஜ் பல்கலைக்கழக உயர் பட்டமும் உயர் கணிதத் திறனும் திரு ச் சீவ இராவ் அவர்களை மாணாக்கர் மத்தியில் உதாரண புருடராக்கியதில் வியப்பில்லை.*
*திரு ச் சீவ் ராவ் இங்கிருந்து நேரே காசிப்பல்கலைக்கழகக் கணக்கியர் பேராசிரியராகச் சென்றார்.*

*திரு.W.A.ருப் (TROUPE) 1926-1927 அதிபர் பதவி ஏற்றார். சிவப்பு. பச்சை. ம் சள்.ஊதா என்று நிறம் நிறமான மைப் பேனாக்களுடன் காட்சி தந்தவர் என்று என் ஆசிரியர்கள் பிரான் கே. எஸ் .எஸ் சொல்லக் கேட்டிருக்கிறேன்.*
*தொடர்ந்து ஒரு தென்னிந்திய அறி ர் வெங்கட்ராமன் அவர்கள் பொறுப்பேற்றார். 1928 முதல் 1933 வரை சேவை செய்தார்.நிறைந்த ஆங்கிலப்புலமை மிக்கவர் சிறந்த பக்தர் என்றும் என் ஆசிரியர்கள் சொல்லக் கேட்டிருக்கின்றேன்.*

*தினமும் மாலைப் பூசை நேரத்திற்கு வண்ணை சிவன் கோயிலுக்குப் போய் பிரதட்சணம் செய்யும் வழக்கமுடையவராம்.*

*ஒரு நாள் ஏதோ காரணத்தினால் நேரம் பிந்திக் கோயிலுக்குச் சென்றாராம். கோயில் திருக்காப்பு செய்து விட்டார்கள். வென்கட்ராமன் தனது நியதியிலிருந்து தவறாமல் கே.கே. எஸ் .வீதி கோணத் தோட்டம், வெள்ளத்தெரு. வைத்தீஸ்வரன் வீதி வழிபட்ட மூன்றாம் பிரகாரத்தை மும் முறை வலம் வந்தாராம்.*

*அடுத்த நாள் செய்தி தெரிந்த கோயில் அறங்காவலர் 'அதிபர் வெங்கட்ராமன் வந்து வழிபட்டுப் போன பின்பே திருக்கதவு சாத்தப்படவேனும்" என்று உத்தரவு போட்டாராம்.*

இவரது ஆங்கிலப் புலமையை இனிக்க பேசி மகிழ்வார் என ஆசிரியர் கறுத்த வெள்ளையர் திரு.A.V.மயில்வாகனம்.

திரு வெங்கட்ராமனிடமிருந்து நிர்வாகப் பொறுப்பை ஏற்று 1933 தொடக்கம் 1952 ஆட்சி புரிந்தார். திரு. A.குமாரசுவாமி கல்கத்தாப் பல்கலைக்கலகத்திலும் இலண்டன் பல்கலைக் கழகத்திலும் உயர் கல்வி பெற்று வழக்கறி ராகவும் (BAR-AT-LAW) உயர்ந்தவர்.

துணிச்சலான நிர்வாகி . சோதனைகள் செய்வதும் வெற்றியிட்டுவதும் இவர் தனித்தத்துவம். ஆண்கள் கல்லூரியாக இயங்கிய இந்துக் கல்லூரியின் தோற்றத்திற்கு வித்திட்டு, பயன் தரு விருட்சமாக்கிய சான்றோன்.

நல்லைக் கந்தன் அடி நாளும் பரவும் பக்தன். கடமையில் இருக்கும் போதே அவன் திருவடி மருவிய மாண்பாளர் . திரு குமாரசாமி உப அதிபராகக் கடமையாற்றிய கணிதமேதை.

V.M.ஆசைப்பிள்ளை 1963 வரை அதிபர் ஆசனத்தை அலங்கரித்தவர். இவரை யாரும் கோயில் குளத்தில் கண்டதாக வரலாறில்லை. இருந்தும் பெரும் பண்பாளர். தான் இந்துக் கல்லூரியில் அதிபர் என்பதை முற்றும் அறிந்து கடமை புரிந்தவர்.

இவர் காலத்தில் பல பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்து வெற்றி கண்டவர். வழிதவறிய அதிகாரத்திற்கு என்றும் மசிந்து கொடுக்காதவர். கல்லூரியின் விவகாரங்கள் கல்லூரியோடு என்ற வரம் காத்தவர். அயர்ந்து மறந்து வீட்டில் சந்திக்கும் போது கல்லூரி சம்பந்தமான பேச்சு எழுப்பப்பட்டால் கதையை மாற்றும் லாவகம் இவர் ஒரு இராசதந்திரியாக இருக்கலாமே என்று எண்ணத் தோன்றும் ஒரு கனவான்.A through Gentleman

1963ல் திரு .C.சபாரத்தினம் அதிபரானார். பழைய மாணவன். சிறந்த கணித ஆசான். கழிவு கட்டை என்று மற்றோர் கழித்து விட்ட பேர்களும் கணிதம் தெரிய வைத்தவர்.செருமலாலும் நக்கல் சிரிப்பாலும் அடங்காத காளைகளை அடக்கி அறிவூட்டியவர்.

அதிகம் பேசமாட்டார். A man of few words. மெய்வல்லுனர் பல்கலைக்கழகக் கல்லூரியில் விருது பெற்றவர்.

மறக்க முடியாத ஒன்று
கே. கே . எஸ் . வீதியில் உள்ள தேனீர் கடைக்கு களவாகப் செல்லும் களவொழுக்கத்தைக் கற்பொழுக்கமாக்கியவர். கல்லூரியிலேயே ஒரு சிற்றுண்டிச் தொழிற் சாலையை அமைத்து எல்லோர் தாகத்திற்கும் தீர்வு கண்டவர்.

C.Saba தொடர்ந்து பொறுப்பேற்றவர் N.Saba இவைகள் செல்லப் பெயர்கள். திரு.N.சபாரத்தினம் யாழ் இந்துவின் பழைய மாணவன். ஆசிரியன் . உபஅதிபர். 1964 தொடக்கம் ஏழு ஆண்டுகள் அதிபராகச் சேவையாற்றியவர்.
ஆங்கிலவாணியின் அருட்கடாசம் நிறையப் பெற்றவர். தமிழ் சமய ஆர்வலர். சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரனாரினதும் அறி ரும் காந்தியவாதியுமான வறண்டி பேரின்ப நாயகத்தினதும் மாணவன்தான் என்பதில் பெருமை கொள்வார்.

இவர் காலத்தில் தான் சேக்கிழார் மன்றம், இலங்கைக் கம்பன் கழகம் என்பவை போன்ற இந்துக் கல்லூரி தொழுவாய் அமைத்து பெருமை பெற்றது.

N.Saba என் மொழிவன்மையால்'கேளாதாரும் கேட்டார்கள்" ஆசிரியர்களாகிய எம்மில் சிலர் விட்ட தவறுகளை உயர் அதிகாரிகள் கண்ட போதெல்லதாம் தன் சொல் வளத்தால் காணதவாறு செய்து காத்தவர் திரு. என்.சபாரத்தினம்.

திரு .N.சபாரத்தினம் ஓய்வு பெற திரு . M .கார்த்திகேயன் Performing அதிபராக 1971 ல் பதவி ஏற்றார்.

ஏறக்குறைய ஒரு ஆண்டுகாலம் 'காந்தி" பதவி வகித்தாலும் அக்காலப் பகுதி "நாம் எல்லோரும் அதிபர்கள் தானே" என்று நிமிர்ந்து நின்ற காலமாகும். பொதுவுடமை வாதியாக இருந்த போதிலும் கடமை கட்டுப்பாட்டில் இம்மியும் விலகாத்திறலோன்.

சார்புமுலாம் கண்டு மிரண்ட அரசு காத்தியை நிலை கொள்ள விடாமை புதினமன்று.

பழைய மாணவனாய் விளையாட்டு மைதானத்தில் விருதுகள் பல பெற்று புகழ் தந்த திரு.இ. சபாலிங்கம் 1971 ல் பொறுப்பேற்று 1975 வரை அதிபராய் அலங்கரித்தார்.

இவருடைய ஆட்சிக்காலம் சிக்கல் நிறைந்த காலம், பொருட்கள் அருமை, விடுதி நடாத்துவதேஒரு சவாலாகிய காலம், மாணவரிடையே குழப்பங்கள் தோன்றி வளரத்தொடங்கியது.

இக் காலத்தில் ஒரு ஆளமையுடன் கூடிய நெறியாள்கை வேண்டப்பட்டது. எல்லா வகையிலும் பொருத்தமுடையவராக திரு. இ.சபாலிங்கம் விளங்கினார்.

1975 இல் திரு. சபாலிங்கம் அவர்களிடமிருந்து கல்லூரியைப் பொறுப்பேற்றார் திரு.பி.எஸ். குமாரசுவாமி, அரிச்சுவடி தொடக்கம் பல்கலைக் கழகம் புகுமுக வகுப்பு வரை வேறு பள்ளி தெரியாத இந்துவின் மைந்தன்.

காலை 7.30 தொடக்கம் மாலை 7 மணி வரை கல்லூரியிலும் விளையாட்டு மைதானத்திலும் இரண்டறக் கலந்து நின்றவர். இப் பழக்கம் அதிபரான பின்பும் புதிப்பிக்கப்பட்டதால் 'படபஸ்" என்ற செல்லப் பெயருக்கு உரித்தானவர்.

சிக்கல்கள் முற்றிய காலத்தும் தளராமல் செயலாற்றியவர். எப்போதும் மாணவர் பக்கமே நின்றவர். இதனால் எங்களால் Boysprincipal என்ற பெயர் பொறிக்கப்பட்டது.

இவர் காலத்தில் தான் யாழ் இந்துக் கல்லூரி யாழ்குடாநாட்டின் சிறந்த கல்லூரியாகவும் திரு.பி.எஸ் குமாரசுவாமி சிறந்த அதிபராகவும் கல்வித் திணைக்களத்தால் விதிப்புரை செய்யப்பட்டது.

தொடர்ந்து அதிபர்களாக திருவாளர்கள் எஸ். பொன்னம்பலம் ,கே.எஸ் குகதாஸ்சன் ,
அ. ப் சலிங்கம் , அருளானந்தம் ஆகியோர் கல்லூரியின் பழைய மாணவர்களே.

இவர்களும் பல பிரச்சனைகளை எதிர்கொண்டவர்கள். திருவாளர்கள் பொன்னம்பலமும் குகதாசனும் கல்லூரியின் 100 ஆண்டு விழாவை செல்வனே நிகழ்வித்து மலர் ஒன்றையும் வெளியிட்டனர்.

இன்றைய அதிபர் திரு.ஏ. சிறிக்குமாரன் பழைய மாணவன். காலத்துக்கே உரித்தான சவால்களை இன்முகத்தோடு எதிர்கொண்டு இன்முகத்தோடு செயற்படுகின்றார்.

ஒப்பிட்டு ரீதியில் இளை ன், மும்மொழிவல்லுனன் அடக்கமும் ஆளுமையும் கொண்டவர். கல்லூரித் தாயின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றி வெற்றிகாண வாழ்த்துவோம்.

உயர்ந்த மாளிகைகள் அதிகம் இல்லை. கற்சுவர்களும் கூரைகளும் கல்லூரியாவதில்லை, குடிசைகளே பல்கலைக் கழகங்களாக கலைபல பயிற்றியமை எமது பண்டைய வரலாற்றுப் பாரம்பரியம்.

இந்துக் கல்லூரியின் பலமெல்லாம் அவள் சேவையாளரின் செம்மைசால் நெ் சங்களே.

*We are poor but there is greatness in our poverty. The greatness is the devoted service of her principals and her an children both old and new.*
அன்னையே உன் மண்ணை முத்தமிட்டு வணங்குவோம்.

க. சிவராமலிங்கம்,
பழைய மாணவன்,
ஆசிரியன், பதில் அதிபர், (1941-1985)

## கலையரசி-2000

பாடசாலை மட்ட கவிதை, கட்டுரைப்போட்டி பரிசு பெற்றோர்

### கவிதைப் போட்டி

| | மத்தியபிரிவு | மேற்பிரிவு |
|---|---|---|
| முதலாம் இடம் | சி. ஜனகன் | தி.கோபிநாத் |
| இரண்டாம்இடம் | தெ.சந்திரகுமார் | வி.உதேஸ் |
| முன்றாம்இடம் | இ.பிரவீன் | கு.செந்தூரன் |

### கட்டுரைப்போட்டி

| | மத்தியபிரிவு | மேற்பிரிவு |
|---|---|---|
| முதலாம் இடம் | க.தர்சனன் | மு. வாகீசன் |
| இரண்டாம் இடம் | தா.ஜெயதர்சன் | கி.நிசாந்தன் |
| மூன்றாம் இடம் | அ.அரிச்சந்திரன் | தெ.நிசாந்தன் |

### JAFFNA HINDU COLLEGE STUDENTS EXHIBIT WON FIRST PLACE IN "JAFFNA SCIENCE ASSOCIATIONS" EXHIBITION.

Jaffna Science Association's Exhibition for year 2000 was held on 29th and30th January at Jaf which was declared open by Mr.Reiner Breven Weldt, Representative of the United Nations Development . The exhibit under the title "For us to continue our existence" put up by the students of JHC awarded the first place.

**Our Congratulations to them.**

G.C.E A/L 1999 - **Aruliah llankumaran** of Jaffna Hindu College comes first in the Island. A high calibre performance considered the non - availability of conditions are not suitable for proper education. Our heartiest congratulations to llankumaran.

According to the recently released A/L Examination results (1999 August), Aruliah Ilankumaran ofJ HC topped the list and ranked No.1 in the Island in the Physical Science Section. He the student of Jaffna Hindu College which has produced and is producing men whose feats reflects the greatmen of their soil.

### G.C.E. (A/L) - AUGUST 1999 QUALIFIED FOR UNIVERSITY ENTRANCE

| **University Entrance** | | **4A's** |
